kanton glarus

**Opferberatungsstelle**
**des Kantons Glarus**
Bahnhofstrasse 13
8762 Schwanden

Telefon: 055 646 67 36
E-Mail: opferberatung@gl.ch
www.gl.ch

opferhilfe-schweiz.ch
aiuto-alle-vittime.ch
aide-aux-victimes.ch

# மணம் புரிந்தவர்கள், பதிவுசெய்யப்பட்ட இணையர்கள், இணைந்து வாழ்பவர்கள் ஆகியோருக்கான பிரிவினை, விவாகரத்து பற்றிய தகவல்கள்

**நான் பிரிந்து வாழ விரும்புகிறேன்: நான் இதனை எவ்வாறு தொடரலாம்?**

கிளாருஸின் கன்ரோன் நீதிமன்றத்தில் நீங்கள் ஒரு «திருமணப் பாதுகாப்பு நடைமுறையைத்» தொடங்கலாம் அத்துடன் பிரிந்து வாழ விண்ணப்பம் செய்யலாம். இப்போது நீங்கள் விவாகரத்து செய்யவில்லை, ஆனால் சட்டப்படி பிரிந்திருக்கிறீர்கள். உடன்படாத பங்காளிகளின் விடயத்தில், குறைந்தது இரண்டு வருடங்கள் பிரிந்த வாழ்க்கையின் பின்னரே விவாகரத்து சாத்தியமாகும். திருமண பாதுகாப்பு நடைமுறை படிவத்தைப் பயன்படுத்தி நீங்களே பிரிந்து செல்ல விண்ணப்பிக்கலாம் அல்லது ஒரு வழக்கறிஞர் மூலம் அதை செயற்படுத்தலாம். பாதிக்கப்பட்டவருக்கான ஆலோசனை நிலையம் உங்களுக்கு உதவ தயாராக உள்ளது.

நீதிமன்றத்தில் அல்லது வழக்கறிஞரின் முதல் சந்திப்பின் போது பின்வரும் ஆவணங்களை எடுத்துச் செல்ல நாங்கள் பரிந்துரைக்கிறோம்:

- ✓ கடந்த கால இரண்டு வருமான வரி விபரம்
- ✓ கடந்த கால உறுதியான வரி மதிப்பீட்டு விபரம்
- ✓ கடந்த ஆறு மாதங்களின் சம்பள விபரம்
- ✓ கடந்த ஆறு மாதங்களின் கணக்கு அறிக்கைகள் (அஞ்சல், வங்கி கணக்குகள்)
- ✓ இணைந்து வாழும் போது வன்முறை பயன்படுத்தப்பட்டது பற்றிய தகவல்களுடன் கூடிய ஆவணங்கள் (மருத்துவ சான்றிதழ்கள், குற்றவியல் நடவடிக்கைகளின் கோப்புகள், பாதுகாப்பு நடவடிக்கை- களுக்கான உத்தரவுகள்)

**திருமண பாதுகாப்பு நடைமுறைக்கு அல்லது ஒரு வழக்கறிஞருக்கு அல்லது இரண்டுக்கும் யார் பணம் செலுத்துகிறார்கள்?**

உங்களிடம் குறைந்தளவு பணம் இருந்தால், இலவச சட்ட அனுசரணைக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டால், நீதிமன்ற செலவுகள், சட்ட மற்றும் மொழிபெயர்ப்பு செலவுகள் ஏற்கப்படும். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக, செலவுகளைத் திருப்பிச் செலுத்த உங்களிடம் போதுமான பணம் இருக்கிறதா என்று நீதிமன்றப் பதிவு சரிபார்க்கும். நிலமைகளுக்கு ஏற்றவாறு, திருப்பிச் செலுத்துதல் ஒப்புக் கொள்ளப்படும் அல்லது கடன் அங்கீகார ஒப்பந்தம் வழங்கப்படும். அத்தகைய ஒப்பந்தத்துடன், 10 ஆண்டு வரம்பு காலம் தானாகவே செல்லுபடி ஆகாது. வழக்கறிஞரின் கட்டணத்தை நீங்கள் செலுத்த முடிந்தால், நீங்கள் வழக்கறிஞருடன் கட்டண ஒப்பந்தத்தையும் செய்யலாம்.

**திருமண பாதுகாப்பு நடைமுறையில் அடங்கும் விதிமுறை என்ன ?**

- ✓ வீட்டில் தங்குவது எவர் என்பது, வதிவிடம் அதிகம் தேவைப்படும் நபர் பெரும்பாலும் குழந்தைகளை கவனிக்கும் நபர் வீட்டில் தங்கலாம், நீங்கள்

வீட்டில் தங்க விரும்பினால், வெளியேறும் திகதி மற்றும் அனைத்து வீட்டுச் சாவிகளையும் கொடுக்க விண்ணப்பிக்கவும்.

- ✓ குழந்தைகள் வசிக்கும் இடம் (பெரும்பாலும்).
- ✓ பெற்றோருக்கு இடையில் குழந்தை பராமரிப்பு எவ்வாறு செயற் படுத்தப்படுகிறது.
- ✓ குழந்தைகளை பராமரிக்க பொறுப்பான நபர் எவ்வளவு பணம் செலுத்துகிறார் (பிள்ளைப் பராமரிப்பு). 18 வயது வரை அல்லது முதல் தொழிற் கல்வி முடியும் வரை, பிள்ளைகளுக்கு பராமரிப்புப் பணம் கிடைக்கும். நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் பொறுப்பான நபர் குழந்தைக்கு ஆதரவளிக்கவில்லை என்றால், நீங்கள் கடன் வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கலாம். அல்லது நீங்கள் மாநில ஜீவனாம்ச உதவியின் ஆதரவைப் பெறலாம்.

**திருமண பாதுகாப்பு நடைமுறை எவ்வாறு செயல்படுகிறது?**

- ✓ திருமண பாதுகாப்புக்கான சட்டப்பூர்வ (பிரித்தல்) கோரிக்கையை நீங்கள் செய்கிறீர்கள்.
- ✓ நீங்கள் உங்கள் புகாரை வாய்மொழியாக உறுதிப்படுத்தி ஆதாரங்களை சமர்ப்பிக்கிறீர்கள்.
- ✓ எதிரான பகுதியினரும் கோரிக்கைகளை வைக்கலாம்.
- ✓ உங்கள் சட்டப்பூர்வ கோரிக்கை பற்றி மற்ற தரப்பினருக்கு வாய்மொழி ஆதாரங்கள் மற்றும் கருத்தை வழங்க நீதிமன்றம் கோருகிறது.
- ✓ இவை பற்றி நீதிமன்றத்தால் கேள்விகள் கேட்கப்படலாம்.
- ✓ சில சமயம் நீதிமன்றம் மேலதிக கோப்புகளை சமர்ப்பிக்கும்படி கேட்கலாம்.
- ✓

**பிரிவினை காரணமாக வன்முறை அதிகரிக்கும் என்ற பயம்**

வெளியேற்றப்பட்ட நபர் உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் அச்சுறுத்தல் அல்லது வன்முறையைப் பயன்படுத்தினால், காவல்துறையினர் உடனடியாக அவரை வெளியேற உத்தரவிடலாம். கட்டாய நடவடிக்கை நீதிமன்றத்தில் வெளியேற்றப்படும் காலமுடிவின் 5 நாட்களுக்குள் நீங்கள் வெளியேற்றத்தை மேலும் 10 நாட்களுக்கு அதிகரிக்க முடியும். தொடர்ந்து அச்சுறுத்தப்படலாம் என்று நீங்கள் அஞ்சினால், சிவில் நீதிமன்றத்தில் இருந்து கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை கோரலாம் (வெளியேற உத்தரவு, தொடர்பு கொள்ள, குறித்த இடத்திற்கு செல்லத் தடை). நாங்கள் இந்த கோரிக்கைகளுக்கு உங்களுக்கு நம்பிக்கையுடனும் இலவசமாகவும் ஆதரவு தருவோம். ஆபத்து அதிகமாக இருந்தால், வெளியேற்றப்பட்ட நபர் தடைகளுக்கு இணங்கவில்லை என்றால், நாங்கள் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பாதுகாப்பான தங்குமிடம் ஒன்றில் தங்கச் செய்யலாம்.

**விரைவாக செயற்படுத்தப்பட வேண்டுமா?**

வன்முறைச் செயல்களையும், அவசரத்தையும் நீங்கள் நிரூபிப்பதற்கான காரணங்கள் இருந்தால், "விசேட-தற்காலிக நடவடிக்கைகள்" என்று அழைக்கப்படுவதற்கு நீங்கள் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம். திருமண பாதுகாப்பு நடவடிக்கைகளின் மிக முக்கியமான விடயங்களை நீதிமன்றம் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கேட்காமல் ஒழுங்குபடுத்தும்.

**குழந்தைகள் யாருடன் வாழ்வார்கள், பராமரிப்பு எவ்வாறு தொடரும்?**

முன்னர் குழந்தைகளை கவனித்துக்கொண்ட பெற்றோரில் ஒருவருடன் குழந்தைகள் வாழ வேண்டும், அவரால் பராமரிப்பதற்கான உத்தரவாதத்தை தொடர்ந்து அளிக்க முடியும். குழந்தையின் நல்வாழ்வு முதன்மை யானது,மற்றும் நீதிமன்றம் 6 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளை தனிப்பட்ட முறையில் நேர்காணல் செய்யலாம். பெற்றோர்கள் இருவரும் குழந்தைகளைத் தொடர்பு கொள்ள உரிமை உண்டு. எனவே கவனிப்பு மற்றும் வருகை உரிமைகள் குறித்து ஒரு உடன்படிக்கைக்கு வருவது நல்லது. குழந்தைகள் அச்சுறுத்தப்பட்டால் அல்லது வருகையின் போது வன்முறை

மோதல்கள் ஏற்பட்டால், துணையுடன் வருகைக்கான உரிமை அல்லது உதவியாளர் தேவைக்கு விண்ணப்பிக்கலாம்.

**நாம் வாழ்வதற்கு தேவையானவற்றை பெறுவது எப்படி?**

பராமரிப்பு குறித்து நீதிமன்றம் இறுதி முடிவை எடுத்து அவர்களுக்கு ஜீவனாம்சம் கிடைக்கும் வரை நீண்ட காலம் ஆகலாம். எனவே, ஒரு முன் ஏற்பாடாக, கிளாருஸ் கன்ரோனின் சமூக சேவைகளிலிருந்து பொருளாதார சமூக உதவிக்கு விண்ணப்பிக்கவும். வன்முறையை ஏற்படுத்திய நபருடன் நீங்கள் ஓர் இணைந்த கணக்கு வைத்திருந்தால், உங்களிடம் எவ்விதமான சேமிப்பும் இல்லை எனில், இரண்டு மாதங்களுக்கு சிறிது பணத்தை திரும்பப் பெறுங்கள், மற்றவருக்கான அங்கீகாரத்தை தடை செய்யுங்கள் . உங்கள் சொந்த பெயரில் ஒரு புதிய கணக்கைத் திறப்பது நல்லது. திருமண பாதுகாப்பு நடைமுறையில், இரு வீட்டுத் தேவைகளும் கணக்கிடப்பட்டு அந்தந்த வருமானத்திலிருந்து கழிக்கப்படுகின்றன. இது ஜீவனாம்சத்தை கணக்கிடுவதற்கான அடிப்படையை உருவாக்குகிறது. குழந்தைகளின் பராமரிப்புக்கான பணமும், வேலையால் கிடைக்கும் வருமானமும் வாழ்வதற்கு போதுமானதாக இல்லாவிட்டால், உங்களுக்கு சமூக உதவி தேவையாகும். சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும் திருமண பாதுகாப்பு முடிவு இருந்தால், நீங்கள் வேலை செய்ய விரும்பினால், நீங்கள் வேலையின்மை காப்பீட்டின் 90 நாட்களுக்கான கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பிக்கலாம் அல்லது கன்ரோன் கிளாருஸில் முன்கூட்டியே ஜீவனாம்சத்திற்காக விண்ணப்பிக்கலாம் .

**நான் வெளிநாட்டைச் சேர்ந்தவர் - பிரிவினை எனது குடியிருப்பு அனுமதியை பாதிக்கிறதா?**

பாதிக்கப்பட்ட பல பெண்கள் குடும்ப குடியிருப்புக்காக சுவிட்சர்லாந்திற்கு வந்ததால் B- குடியிருப்பு நிலை உள்ளது; இவ்வாறு இருப்பது ஒன்றாக வாழும் நிலையுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் சுவிட்சர்லாந்தில் தங்குவதற்கு சிறந்த நிலைமைகளைக் கொண்டுள்ளனர். பிரிவினை விடயத்தில், ஐரோப்பிய ஒன்றியம் அல்லாதவர்கள் குறைந்தது மூன்று ஆண்டுகளாக சுவிட்சர்லாந்தில் வாழ்ந்திருந்தால், குடியேற்ற அலுவலகத்தில் தங்குவதற்கான கால நீட்டிப்புக்கு விண்ணப்பிக்கலாம், அத்துடன் ஒருங்கிணைந்துள்ளதையும் நிரூபிக்க முடியும். முக்கியமான தனிப்பட்ட காரணங்களை நீங்கள் கோரலாம் (வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர் அல்லது உங்கள் சொந்த நாட்டில் சமூக சேர்க்கைக்கு அச்சுறுத்தல்கள்). இது தொடர்பாக நாங்கள் உங்களுக்கு இலவசமாகவும் நம்பிக்கைக்குரிய முறையிலும் ஆலோசனை வழங்குவோம்.

**திருமணப் பாதுகாப்பு நடைமுறை பரிசீலிக்கப்படுகையில் நடப்பது என்ன?**

உங்கள் குழந்தைகளை உங்களுடன் அழைத்துச் செல்ல முடியாது, எனவே குறைந்தது அரை நாள் குழந்தை பராமரிப்புக்கு ஏற்பாடு செய்யுங்கள். ஜெர்மன் உங்கள் தாய்மொழி இல்லையென்றால் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில் மொழிபெயர்ப்பைக் கோருங்கள். நீங்கள் ஒரு வழக்கறிஞரால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டால், வழக்கறிஞர் உங்களுக்கு செயல்முறைகளை தெரிவிப்பார். நீங்கள் ஒரு வழக்கறிஞர் இல்லாமல் நீதிமன்றத்தில் சமூகமளித்தால், உங்களுக்கு நிச்சயம் இல்லாதபோது தீர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டாம். திரும்பப் பெறுவதற்கான உரிமை 10 நாட்கள் இருந்தால் மட்டுமே கையொப்பமிடுங்கள். இரத்து செய்யும் காலத்தின் முன்பாக நிபுணர் ஒருவருடன் இதனை ஒப்பிட்டு நீங்கள் பேசுங்கள்.

**என்னால் ஒப்புக் கொள்ள முடியாத தீர்ப்பிற்கு எதிராக நான் என்ன செய்ய முடியும்?**

தீர்ப்பிற்கான காரணத்தை நீங்கள்10 நாட்களுக்குள் கோர வேண்டும் அல்லது மேல்முறையீடு செய்ய வேண்டும். மேல்முறையீடு பற்றிய விபரத்தை தீர்ப்பின்

முடிவில் காணலாம். 10 நாட்கள் கடந்துவிட்ட பிறகு, வாழ்க்கை நிலைமை கணிசமாக மாறினால் மட்டுமே மாற்றம் சாத்தியமாகும். நீங்கள் மீண்டும் மற்றய துணையுடன் வாழ விரும்பினால், தீர்ப்பு தானாகவே காலாவதியாகி விடும்.

**திருமண பாதுகாப்பு செயல்முறையை விட விவாகரத்து சிறந்ததல்லவா?**

இரு பகுதியினரும் ஒப்புக் கொண்டால் எந்த நேரத்திலும் விவாகரத்து சாத்தியமாகும். எவ்வாறாயினும், இரத்து செய்யக்கூடிய ஒரு ஒப்பந்தமாக இது இருக்கும் என்பதை நீங்கள் உறுதிப்படுத்துகிறீர்கள். மற்றய பகுதியின் விருப்பத்திற்கு எதிராக, பிரிந்த இரண்டு ஆண்டுகளுக்குள் விவாகரத்து செய்யலாம். திருமண பாதுகாப்பு செயல்முறை பொதுவாக மிக வேகமாக இருக்கும்.

**நான் கட்டாயமாக திருமணம் செய்து கொள்ளப்பட்டால்  என்ன செய்ய முடியும்?**

சுவிட்சர்லாந்தில் “கட்டாய திருமணம்” தடைசெய்யப்பட்டுள்ளது. திருமணம் வேறு நாட்டிலா அல்லது சுவிட்சர்லாந்திலா நடைபெற்றது என்பது முக்கியமல்ல. சுவிட்சர்லாந்தில் உங்கள் இணையரை சுதந்திரமாக தேர்வு செய்ய உங்களுக்கு உரிமை உண்டு. கட்டாய திருமணம் தொடர்பான உங்களின் கேள்விகளுக்கு இலவசமாகவும் நம்பிக்கைக்குரிய முறையிலும் நாங்கள் ஆலோசனை வழங்குவோம்.

**பதிவு செய்யப்பட்ட இணையரிடம் இருந்து நான் வெளியேறுவது எவ்வாறு?**

நீங்கள் கிளாருஸின் கன்டோன் நீதி மன்றத்தில் பிரிவினைக்கு விண்ணப்பிக்கலாம். அத்துடன் அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகள் ஏற்பட்டால் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு விண்ணப்பிக்கலாம், இது திருமண பாதுகாப்பு நடைமுறைக்கு ஒத்ததாகும். பிரிவினை தொடர்பாக மற்ற தரப்பினர் உங்களுடன் உடன்படவில்லை என்றால், ஒரு வருடத்திற்குப் பிறகு அவர்களின் விருப்பத்திற்கு எதிராக இணைப்பினை நீங்கள் விலக்கி விடலாம்.

**நாங்கள் இணைந்து வாழ்கிறோம் - நான் பிரிந்து செல்வது எவ்வாறு ?**

இணைந்து வாழ்பவர்களின் பிரிவின் விடயத்தில் வெவ்வேறு செயல்முறைகள் ஒரே நேரத்தில் செயற்படும். குழந்தை மற்றும் வயதுவந்தோர் பாதுகாப்பு ஆணையம் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு ஒதுக்கீடு செய்வதை ஒழுங்குபடுத்துகிறது. கன்ரோன் நீதிமன்றம் ஜீவனாம்சத்தை ஒழுங்குபடுத்துகிறது. குடியிருப்பில் யார் தங்கலாம் என்பதும்  வாடகை ஒப்பந்தத்தின் கையொப்பங்கள், வாடகைக்கு கொடுத்தவரின் மற்றும் பிற தரப்பினரின் நல்லெண்ணத்தைப் பொறுத்தது. வன்முறை ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட நபராக நீங்கள் சிவில் நீதிமன்றத்திடமிருந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை கோரலாம். நாங்கள் உங்களுக்கு இலவசமாகவும் நம்பிக்கைகுரிய முறையிலும் ஆலோசனை வழங்குகிறோம்.

**முக்கியமான முகவரிகள்**

- Glarner Anwaltsverband: http://www.glav.ch/
- Anwaltsregister Kanton Glarus: https://www.gl.ch/rechtspflege/anwaltsregister.html/276
- Gesuch unentgeltliche Rechtspflege Kanton Glarus: https://www.gl.ch/public/upload/assets/7652/18_Gesuch_unentgeltliche_Rechtspflege.pdf
- Gesuch Eheschutz Kanton Glarus (Trennung) https://www.gl.ch/rechtspflege/online-schalter.html/287